RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s249

OPEN ACCESS

# திருமூலரின் மெய்யியல் கோட்பாடுகள்

ச. அருள் ஜோஸ்பின் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி), தூத்துக்குடி-628001, தமிழ்நாடு, இந்தியா

# The Philosophical Principles of Thirumoolar

S. Arul Josephine [a, *]

[a] Department of Tamil, St. Mary's College (Autonomous), Thoothukudi-628001, Tamil Nadu, India

* Corresponding Author: josevin06@gmail.com

Received: 17-08-2022
Revised: 27-10-2022
Accepted: 10-11-2022
Published: 15-12-2022

Check for updates

## ABSTRACT

Thirumanthiram, composed by Thirumoolar, is a philosophical book. This is the first book that attempts to explain the philosophy of the shastras. Philosophy is the acquisition of the right knowledge. The best way to get it is through the senses. Thirumoolar holds that the body, which comprises the senses, is the medium through which knowledge is attained. It tells us how to grow the body and thereby develop life. While Western philosophies are free from myths and create new philosophies, Indian philosophies are adapting to tradition. Thirumoolar's philosophy suggests ways to know and achieve the truth. In this way, Thirumoolar is also prepared to accept or reject the tradition. Moreover, Thirumanthiram explains how to get rid of the shackles of this worldly life and live a great life without death. He explains how to live without desire for anything, to be free from desires, and to live alone. Man is advised to live free from religious restrictions. Thirumoolar emphasizes the philosophy of self-knowledge. Moreover, only one who knows himself fully can understand others, other matters, and the universe. Thirumoolar's philosophic principles tell anyone to examine and know with the strength of his knowledge without forcing anything. Thirumanthiram gives us the way to freedom rather than answering the questions of life.

**Keywords:** Thirumanthiram, Thirumoolar, Myths, Shastras

## முன்னுரை

தமிழரின் தத்துவ மரபுகள் தொல்காப்பியர் காலத்தில் துவங்குகிறது. புறநானூற்றில் அதற்கான தடயங்கள் இருக்கின்றன. அதாவது தமிழரின் தத்துவ மரபுகள் மிகவும் பழமையானவை. சமணம், பௌத்தம், ஆசீவகம் முதலிய கடவுள் மறுப்புத் தத்துவங்கள் வளர்ச்சி அடையும் பொழுது தமிழர் தத்துவங்கள் நம்பிக்கை சார்ந்ததாக இருந்தது. இந்த நம்பிக்கை சார்ந்த தத்துவங்களை மெய்யியல் சார்ந்த கொள்கை வடிவமாக முன்னிறுத்தியவர் திருமூலர் ஆவார். முதலில் திருமூலரே தமிழர் மரபுகளை முறைப்படுத்தப்பட்ட மெய்யியல் கோட்பாடாக உருவாக்கி நெறிப்படுத்தியவர். திருமூலரே சைவ சித்தாந்தம் என்ற கொள்கையையும் சொல்லையும் முதலில் பயன்படுத்தியவர். திருமூலர் மெய்யியல் கோட்பாடுகளை அறிவு நிலையில் நின்று நிலைநிறுத்துகிறார். விடுதலை வாழ்வுக்கு அறிவு நிலையே சிறந்தது என்று அறிவுறுத்துகிறார். அவ்வகையில் இந்த ஆய்வுக் கட்டுரையானது கடவுள் சார்ந்த மரபுகளிலிருந்து மாறி மெய்யியலை முன்வைப்பதாக அமைகிறது.

## திருமூலரின் மந்திரச் சொற்கள்

திருமூலர் தன் திருமந்திரத்தில் அவர் ஆராய்ந்து அறிந்த சில மந்திரச் சொற்களைக் கூறுகிறார். ‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’, ‘அன்பே சிவம்’, ‘நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’, ‘என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே’, ‘உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்’, ‘உடம்பார் அழியின் உயிரார் அழிவர்’, ‘உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே’ - இந்த வரிகளில் மக்களும் கடவுளும் தர வரிசைப்படுத்தப்பட்ட நிலையில் மக்களையும் கடவுளையும் ஒன்றாக்குகிறார். இறைவனுக்கு வடிவங்கள் பல உருவாக்கப்பட்டு வழிபட்ட நிலையில் பலரால் காண முடியாதக் கடவுளை அனைவரும் அறிந்த உள்ளத்துணர்வாம் அன்பே கடவுள் என்ற உண்மையை உணர்த்துகிறார். தான் அறிந்தவற்றை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் பொதுவெளியில் விவரிக்கிறார். என்னை நன்றாகப் படைத்த இறைவன் தன்னை நன்றாகப் படைப்பதற்குத் தமிழையே தேர்ந்துகொண்டான் என்று தமிழை முன்னிறுத்துகிறார். உலகம், உடல், உயிர் அனைத்தும் மாயை என்று கூறப்பட்ட நிலையில் உடம்பு உண்மை, உயிரை வளர்க்கும் கருவியே உடல் தான் என்று பல்வேறு வகையில் மரபுக்கு மாற்று சிந்தனையை முன்னிறுத்துகிறார்.

## மெய்யியல் நெறி

திருமந்திரமானது பக்தி இலக்கியங்களோடு வகைப்படுத்தப்பட்டிருந்தாலும் இதனை ஒரு சிறந்த மெய்யியல் நூல் எனலாம். உண்மையை அறிவதும் அடைவதற்குமான வழிகளை கூறுவதே இதன் சிறப்பாகும். உண்மையை ஒரு குறிப்பிட்ட நெறி ஒன்றின் வழியாக அடையலாம் என்பதை,

“நெறியைப் படைத்தான் நெருஞ்சில் படைத்தான்

நெறியில் வழுவின் நெருஞ்சில் முள்பாயும்

நெறியில் வழுவாது இயங்கவல் லார்க்கு

நெறியில் நெருஞ்சில்முள் பாயகி லாவே” (Ramathapillai, 1957)

இதில் நம் பாதை இருக்கிறது. பாதைக்குப் பக்கவாட்டிலோ சில்லென்று பூத்த சிறு நெருஞ்சில் காடு இருக்கிறது. பாதை மாறாமல் நடந்தால் பாதங்களில் நெருஞ்சில் முள் பாயாது. பாதை மாறினால் முள் பாயும். எனவே பாதை மாறாமல் நடங்கள் என்கிறார். ஆனால் சில வேளைகளில் நெருஞ்சில் செடி பக்கவாட்டில் வளர்ந்து பாதையை மறைத்தால் நெருஞ்சியை நீக்கி புதிய பாதையை உருவாக்குவதே அறிவாளிகள் செயலாகும். அப்படியானால் “இறைவனை அடையும் வழியானது அனைவருக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும் என்பதே திருமூலரின் உடன்பாடாகும். திருமூலர் தன்னியல்பில் ஓர் உடன்பாட்டாளர். உடன்பட வாய்ப்பில்லை என்றால் கொஞ்சமும் தயங்காத மறுதலிப்பாளர்" என்று ஆறுமுகத் தமிழன் கூறுகிறார் (Arumugath Tamilan, 2019).

திருமூலர் மரபை முற்றாக மறுத்தவர் அல்லர். மரபார்ந்த நெறிகளையே அவரும் முன்வைக்க விரும்புகிறார். அவற்றில் செல்ல முடிந்தவர்கள் செல்லலாம். அதுவே சிறந்தது என்றாலும், அந்த நெறிகள் உங்களை அடிமைப்படுத்தும் பொறிகள் என ஆகுமானால் நெறிகளை விட்டு நீங்கி உங்கள் எண்ணத்தின் வழியே செல்க என புதிய பாதை ஒன்றையும் காட்டித் தருகிறார்.

## பற்றற்ற நிலை

உலகத்து உயிர்களின் இயற்கை நிலையினை,

“பாளையாம் தன்மை செத்தும் பாலனாம் தன்மை செத்தும்

நாளும்நாள் சாகின்றோமால் நமக்குநாம் அழாத தென்னே?” (Somasundaranar, 1964)

என்னும் குண்டலகேசிப் பாடல் நமது ஒவ்வொரு பருவமும் இறந்தபின் அடுத்த பருவம் பிறக்கிறது என்கிறது. இதன்படி ஒவ்வொரு நாளும் நாம் செத்துக்கொண்டிருக்கிறோம். இந்த

நிலையாமையை நாம் உணர்ந்துள்ளோமா? நிலையாமையை விட்டு தொலையாமைக்குப் செல்ல நாம் செய்ய வேண்டியது யாது? பற்றுதல் என்பது மனித இயல்பு. பற்றுதலை விட முடியாத நிலையில் நாம் பற்ற வேண்டிய பொருளை மாற்றிக் கொள்ள வேண்டியதுதான் சிறந்த வழியாக இருக்க வேண்டும் என்கிறார் திருமூலர்.

"பற்றது பற்றில் பரமனைப் பற்றுமின்

கற்றவர் பேரின்பம் உற்றுநின் றாரே" (Chidambaranar, 1942)

எதையேனும் பற்ற வேண்டும் என்றால் பரமனைப் பற்றுங்கள். முதல்வன் அருள் பெற்றால் எல்லாமே முற்றும். இதனைக் கற்றவர்கள் தொலையாத பேரின்பம் பெறுவார்கள். இந்த பற்று நெறிதான் சமயங்கள் சொல்லித் தரவேண்டிய பக்தி நெறியாகும்.

நாம் இறைவனைப் பின்பற்ற எண்ணும்போது நம் ஆணவத்தை அதாவது அழுக்கை, ஆசையை அறுக்க வேண்டும் என்பதை,

"ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்

ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்

ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்

ஆசை விடவிட ஆனந்தம் ஆமே" (Ramathapillai, 1957)

என்ற அடிகளால் விளக்குகிறார். ஆசையை விட்டுவிடுங்கள் அழுக்கை அறுங்கள். ஈசனோடு இணைவதற்காக என்றாலும் கூட ஆசையை விட்டுவிடுங்கள்: ஆசைப்பட்டீர்கள் என்றால் ஆசைப்பட்டதை அடையவும் அடைந்த இடத்தை தக்க வைத்துக் கொள்ளவும் படாத பாடுபட வேண்டியிருக்கும். அது மாபெரும் துன்பம். ஆசையை விட்டு விட்டால் அதனைக் காக்கும் பொறுப்பு இல்லாமல், விட்டு விடுதலையாகிவிட்ட பெரும் பேரின்பத்தில் நிலைபெறலாம். அத்தனைக்கும் ஆசைப்படச் சொல்வது நம்மை நாமே காணாமல் தொலைத்து விடுகின்ற உலகியல் என்றால் ஆசையிலிருந்து நீங்கி ஈசனுக்கும்கூட ஆசைப்படாமல் ஒதுங்கி தானாய் தனியாய் நிற்பது உங்களை நீங்களே கண்டுபிடித்துக்கொள்கிற உயிரியல் என்ற மிகச் சிறந்த மெய்யியல் நெறியை முன்வைக்கிறார்.

## தன்னை அறிதல்

அறிவில் தலையாயது தன்னை அறிதல் என்பது திருமூலர் கூற்றாகும். எவ்வாறெனில்,

"தன்னை அறியத் தனக்கு ஒரு கேடு இல்லை

தன்னை அறியாமல் தானே கெடுகிறான்

தன்னை அறியும் அறிவை அறிந்தபின்

தன்னையே அர்ச்சிக்கத் தான்இருந் தானே" (Ramathapillai, 1957)

என்று விளக்கம் தருகிறார். ஒருவன் தன்னை அறியும் போது அவனுக்கு துன்பம் ஒன்றும் வருவதில்லை. தன்னை அறியாதிருக்கும் போதுதான் அவன் துன்பப்படுகிறான். தன்னை அறிதல் என்பது தனது குறை, நிறைகளை அறிவதாகும். நமது குறைகளை நாமே அறியும் போதுதான் அவற்றைக் களைந்து அகத்தூய்மை பெற முடியும். இதனையே வள்ளலாரும்,

"தன்னை அறிந்து இன்பம் உற வெண்ணிலாவே - ஒரு

தந்திரம்நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே" (Urana Adikal, 1972)

என்று தன்னை அறிதலின் அவசியத்தை அறிவுறுத்துகிறார். மேலும் திருமூலர் நமக்கு நாமே பகைவர்கள். நாமே நண்பர்கள். இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் நமக்கு நடக்கும் அனைத்து

வினைகளுக்கும் நாமே காரணம் என்ற உண்மையினை ஆணித்தரமாகக் கூறுகிறார். இதனையே “தீதும் நன்றும் பிறர் தர வாரா” (Avvai Duraisamy Pillai, 1951) என்ற புறநானூற்று அடியும் உணர்த்துகிறது.

உலகையும் உலகியல் சார்ந்தவற்றையும் அறிய முயற்சித்தலே மனித இனத்தின் இயல்பாகும். அறிந்தவற்றை மேலும் ஆழமாவும், நுட்பமாகவும் அறிய மனிதன் முற்படுவான். அவ்வாறு முற்படும் மனிதன் முதலில் தன்னை அறிய வேண்டும். தன்னை அறிந்தவன் அறிவு பொய்யாகாது நிலை மாறாது. இதனை திருமூலர் தன்னை அறிந்த ஒருவனுக்கு ஒரு துன்பமும் வராது. தன் நிலை அறியாத ஒருவன் தானே கெட்டு அழிகிறான். தன்னையும் தன் அறிவின் நிலையையும் அறிந்த ஒருவன் தன்னையும் தன் அறிவையுமே நம்பி இருப்பான் என்கிறார். உயிரானது தன் வடிவம் தெரியாததால் உலகியல் சார்ந்தவற்றோடு தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு தடுமாறுகிறது. எனவே உயிரின் வடிவை,

“அறிவு வடிவுஎன்று அறியாத என்னை

அறிவு வடிவுஎன்று அருள்செய்தான் நந்தி

அறிவு வடிவுஎன்று அருளால் அறிந்தே

அறிவு வடிவுஎன்று அறிந்துஇருந் தேனே” (Chidambaranar, 1942)

என்று அறிவின் வடிவாகத் திருமூலர் காட்டுகிறார். நான் அறிவு, அறிவுதான் என் வடிவம், அறிவைத் தவிர நான் வேறொன்றுமில்லை என்ற உண்மை நிலையினைத் திருமூலர் உலகுக்கு உணர்த்துகிறார்.

## அறம் காக்க

ஈதலின் தன்மை அற வழியில் இருக்க வேண்டும் என்பதை,

“ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்

பார்த்துஇருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்

உடையீர், விரைந்துஒல்லை உண்ணன்மின்

காக்கை கரைந்துஉண்ணும் காலம் அறிமினே” (Avvai Duraisamy Pillai, 1951)

என்ற பாடலில் விளக்குகிறார். தெரிந்தவர் தெரியாதவர் என்ற வேறுபாடு பார்க்காமல் கொடுக்க வேண்டும். பசி என்று யார் கேட்டாலும் கொடுக்க வேண்டும். அவர் நல்லவரா, கெட்டவரா என்ற கணக்குப் பார்க்காமல் காகத்தைப் போல அனைவரோடும் பகிர்ந்து உண்ணுங்கள் என்று கூறுகிறார். இதனையே வள்ளுவரும்,

“வறியார்க்குஒன்று ஈவதே ஈகை மற்றுஎல்லாம்

குறிஎதிர்ப்பை நீரது உடைத்து” (Parimelalhagar, 1967)

என்ற குறளில் இல்லாதவர்களுக்குக் கொடுப்பதே கொடை என்று கூறுகிறார். அதனையே திருமூலரும் பசி போக்கிக் கொள்ளும் வழியற்று நிற்பவர்களுக்கு உணவு கொடுப்பதே அறம். அதனை செயல்படுத்துபவரே மனிதர் என்று கூறுகிறார். மேலும் கடவுளை அடையும் பெரும் பாதைக்கான வழியை அறத்தின் மூலம் அடையலாம் என்றும் கூறுகிறார்.

“மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்

அறந்தான் அறியும் அளவு அறியரரே” (Avvai Duraisamy Pillai, 1951)

மறத்தை, வலிமையை வழியாகக் கொண்டவர்கள் எங்குத் தேடினாலும் ஈசனை அடைய முடியாது. ஆனால் அறத்தை வழியாகக் கொண்டவர்களை ஈசனேத் தேடிக் கொண்டு வருவான். ஆகவே இறைவன் இல்லம் அடைய அறமே சரியான வழி என்று கூறுகிறார். மேலும் உலகியல் அறிவு

மட்டுமே அறிவாகாது. உலகியல் அறிவையே அறிவு என்று நம்புவது அறியாமையாகும். அந்த அறியாமையைக் கடக்க வேண்டும்.

## பிண்டத்தின் உள்ளே அண்டம்

ஐம்பெரும் பூதங்களால் ஆனது உலகமாகிய அண்டம். அதேபோல் ஐம்புலன்களால் ஆனதுதான் இந்த உடலாகும். எனவே நாம் அண்டவெளியில் தேடுவதை நம் பிண்டத்தில் தேடலாம் என்று திருமூலர் கூறுகிறார். ஐம்பூதங்களாக

“நிலம், தீ, நீர், வளி, விசும்பொடு ஐந்தும்

கலந்த மயக்கம் உலகம்” (Perasiriyar, 1966)

என்று தொல்காப்பியர் கூறுகிறார். நிலம், தீ, நீர், வளி என்னும் காற்று, விசும்பு என்னும் ஆகாயம் ஆகிய ஐந்தும் ஒன்றோடு ஒன்று கலந்து, புரண்டு, மயங்கி உண்டானதே உலகம் என்று உலகின் தோற்றம் பற்s

றி தொல்காப்பியர் கூறுகிறார். இதனையே,

“மண் திணிந்த நிலனும்

நிலன் ஏந்திய விசும்பும்

விசும்பு தைவரு வளியும்

வளித் தலைஇய தீயும்

தீ முரணிய நீரும் என்றுஆங்கு

ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்

போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்

வலியும் தெறலும் அளியும் உடையோய்” (Avvai Duraisamy Pillai, 1951)

என்று பூதங்களின் இயல்பு பற்றி புறநானூறு விளக்குகிறது. ஐம்பூதங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இயல்பு உண்டு. நிலத்தைப்போல இகழ்வாரைப் பொறுத்தும், ஆகாயத்தைப் போல செய்வதை அகலமாகவும், விரிவாகவும் யோசித்து செய்யவும், காற்றைப்போல உடலாலும், உள்ளத்தாலும் உறுதியாகவும், வலிவாகவும், தீயைப் போல அழிக்க வேண்டியவற்றை அழித்தும், நீரைப் போல இன்னார், இனியார் என்று பாராமல் அனைவருக்கும் வழங்குபவர்களாக இருப்பவன் என்று சேரலாதனை முடிநாகராயர் கூறுகிறார். இதனால் ஐம்பூதங்களின் இயல்பு நம் புலன்களில் ஒன்றி இருப்பாகக் கூறுகிறார். இதனையேத் திருமூலரும் இறைவனைத் தேடி எங்கெங்கோ திரியாமல், உடம்பை வலுப்பெறச் செய்தால் இந்த உடலே இறைவனைக் கண்டடைய சிறந்த கருவியாகும் என்று கூறுகிறார்.

“அண்டத்தின் உள்ளே அளப்புஅரிது ஆனவள்

பிண்டத்தின் உள்ளே பெருவெளி கண்டவள்

குண்டத்தின் உள்ளே குணம்பல காணினும்

கண்டத்தின் உள்ளே கலப்புஅறி யார்களே” (Ramathapillai, 1957)

அண்டத்திற்கு உள்ளே அளவு கடந்து நிரம்பி இருக்கும் சக்தியானது நம் பிண்டத்திற்கு உள்ளேயும் இருக்கிறது. இவ்வாறு உடம்பிற்குள் கலந்து இருப்பதை ஏன் வெளியில் தேடவேண்டும்? என்று திருமூலர் வினவுகிறார். “உழவு என்பது மண்ணைத் தோண்டி பயிர் செய்வது மட்டுமன்று தன்னைத் தோண்டி உயிர் செய்வதும் தான். உழவு என்பது நிலத்தில் நிகழ்வது மட்டுமன்று, உடலில்

நிகழ்வதும் தான். அண்ட உழவில் நிகழ்வதுதான் பிண்ட உழவிலும் நிகழ்கிறது" என்று ஆறுமுகத்தமிழன் கூறுகிறார் (Arumugath Tamilan, 2019).

## மரணமற்ற பெருவாழ்வு

மரணம்தான் மனிதனை மதத்துடன் இணைக்கிறது. மதக்கட்டுக்குள்ளிருந்து மனிதன் விடுபட வேண்டுமென்றால் மரண பயத்திலிருந்து மனிதன் விடுபட வேண்டும். அதற்காகவே திருமூலர், சித்தர்கள், வள்ளலார் போன்றோர் மரணமில்லா பெருவாழ்வு பற்றி பேசினார்கள் இதனை,

"சாகாத கல்வியே கல்வி ஒன்றேசிவம்

தான்என அறிந்த அறிவே தகும் அறிவு

மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்

மரபுஎன்று உரைத்த குருவே" (Urana Adikal, 1972)

சாகாத கல்வியே கல்வி, கடவுள் ஒன்றே என்று அறிந்த அறிவே அறிவு, உலகை முழு அன்புடன் நேசித்து வாழும் வாழ்வே இன்ப வாழ்வாகும். இதுதான் சமரச சன்மார்க்க நெறி என்று வள்ளலார் கூறுகிறார். மேலும் இந்நிலையை வலியுறுத்தும் விதமாக பெரியபுராணத்தில் "இறவாத இன்ப அன்பு வேண்டும் பிறவாமை வேண்டும் மீண்டும் பிறந்தால் உன்னை என்றும் மறவாதிருக்க வேண்டும்" என்ற காரைக்கால் அம்மையாரின் அன்பு நிலையாகக் காணமுடிகிறது (Vengada Subburaya Nayagar, 2010). இதனையே வள்ளுவரும்,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றுஅது

வேண்டாமை வேண்ட வரும்" (Parimelalhagar, 1967)

என்று நாம் வேண்டும் என்று தவிக்காமல் வேண்டாம் என்று தவிர்த்தால் பிறக்காமல் இருக்கலாம் என்று குறள் வழிமொழிகிறது. மேலும் மணிமேகலையும் "பிறந்தவர்கள் எல்லோரும் துன்பத்தில் உழல்கிறார்கள். பிறக்காதவர்கள் எல்லோரும் இன்பத்தில் திளைக்கிறார்கள். வேண்டும் வேண்டும் என்று ஆசைப்படுகிறவர்கள் மீண்டும் மீண்டும் பிறக்கிறார்கள். வேண்டாம் வேண்டாம் என்று விலகிக் கொண்டவர்கள் பிழைக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்க" என்று சீத்தலைச் சாத்தனாரும் விளக்குகிறார் (Venkatasami Nattar, Avvai Duraisamy Pillai, 1946). இதனையே திருமூலரும் "தனக்குள் கண்டுகொண்டு தனக்குள் ஒடுங்கித் தனக்குள்ளே நிலைபெற்றுவிட்ட ஒருவனது உள்ளம் நடுங்காது. மாறாக எரிகின்ற விளக்குபோல் அவனது வெளி தனியானது. அதில் அவன் உண்டே தவிரப் பிற இல்லை துன்பமில்லை பகல் இல்லை இரவு இல்லை அவன் அடையப்போகிற பயனும் எதுவும் இல்லை. எதுவும் இல்லாத இன்பமான நிலையே மரணமில்லா பெருவாழ்வு நிலையாகும்" என்று கூறுகிறார். இது சைவ சித்தாந்தத்தின் தத்துவ நிலைப்பாடாகும்.

## சமயச் சுதந்திரம்

மறைபொருளாம் இறைபொருளை உணரும் வகையினை சிறப்பாக அறிவு நிலைக்கு உட்பட்டு விளக்குகிறார். நாம் பார்க்கும் பொருளை அதன் தன்மைகள் குறித்தும் வடிவம் குறித்தும் விளக்க முடியும். மேலும் நாம் பார்க்கும் பொருளிலும் நம் பார்வைக்கும் அறிவுக்கும் புலனாகாத நிலையும் உண்டு. நாம் பார்க்கும் பொருளிலே இந்நிலை என்றால் பார்க்காதப் பொருளை, அதன் தன்மைகளை எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்? அதற்கு வழியாக,

"செல்லும் அளவும் செலுத்துமின் சிந்தையை

வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை

இல்லை எனினும் பெரிதுஉளன் எம்இறை

நல்ல அரன்நெறி நாடுமின் நீரே" (Avvai Duraisamy Pillai, 1951)

என்ற பாடல் மூலம் வழிகாட்டுகிறார். எந்த அளவுக்கு உங்கள் சிந்தனை செல்லுமோ அந்த அளவுக்கு செலுத்தி அறிந்து கொள்ள வேண்டும். என்ன அறிந்துகொண்டோம் என்பதை உண்மையாக விளங்கிக் கொள்ள வேண்டும். மறைபொருள் என்று ஏதும் இல்லை என்று கண்டால் அதற்குக் காரணம் முயற்சிக் குறைவே ஆகும். முயற்சி மிகக் கொண்டு அறிய முயல வேண்டும் என்று அறிவு நிலை கொண்டு இறைபொருள் காண அறிவுறுத்துகிறார். இறைவனின் உருவம் எத்தகையது என்று அறியும் ஆவல் பலருக்கும் இருக்கும். சிவனாரின் உருவம் காண காரைக்கால் அம்மையாரும் ஆர்வம் கொள்கிறார். "உன் திருவுருவம் தெரியாமலே அன்று உனக்கு நான் ஆட்பட்டேன். இன்று வரை உன் திரு உருவத்தை நீ எனக்கு காட்டவில்லை. நானும் கண்டதில்லை. என்றாவது ஒருநாள் உன் கடவுளின் உருவம் எத்தகையது என்று யாராவது கேட்டால் நான் என்ன பதில் செல்வேன்?" (Thambiran Swamigal, 1949) என்று காரைக்கால் அம்மையாரின் கேள்வியில் சிவனாரின் உருவைக் காணும் ஆவலைக் காண முடிகிறது. மேலும் வள்ளலாரும் "உன் திருவடி அழகைப் பலரும் பாடிப் போற்றுகிறார்கள். ஆனால் நான் பார்த்ததே இல்லை. ஏன் பார்த்தால் தான் என்ன? ஏன் காட்ட மறுக்கிறாய்? கண் பட்டுவிடும் என்ற அச்சமா? நேரில் காட்டாவிட்டாலும் கனவிலேனும் காட்டவும் மறுக்கிறாயே?" (Urana Adikal, 1972), என்று வள்ளலாரும் ஏங்குகிறார். ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாதவனுக்கு ஆயிரம் திருநாமங்களும் திருவுருவங்களும் இருந்தால் என்ன? என்று திருமூலரும் வினவுகிறார். மேலும் அவரே அதற்கு ஒரு மிகச் சிறந்த தீர்வும் கொடுக்கிறார்.

"எவ்வாறு காண்பான் அறிவு தனக்குஎல்லை

அவ்வாறு அருள்செய்வான் ஆதி அரன்தானும்

ஒவ்வாத மன்றுஉள் உமைகாண ஆடிடும்

செவ்வானில் செய்ய செழுஞ்சுடர் மாணிக்கமே" (Ramathapillai, 1957)

இறைவனை நீங்கள் எவ்வாறு அறிய விரும்புகிறீர்களோ அவ்வாறே அறிவீர்கள். கடவுள் இருப்பதாய் நம்பினால் இருப்பதாகவும், இல்லாதவனாக நம்பினால் இல்லாதவனாவும் காணக் கிடப்பவன் கடவுள். மேலும் உமை அம்மை சிவபெருமானை ஆட்டக்காரனாய்க் காண ஆவல் கொண்டபோது ஒரு சிறந்த ஆட்டக்காரனாய் உடனே சிவதாண்டவம் ஆடினான். ஆக காண விரும்புவோர் விரும்பும் வண்ணம் காணக் கிடப்பவன் கடவுள் என்ற உண்மை நிலையினை உணர்த்தி, சமயச் சனநாயகத்தை திருமூலர் நிலைநாட்டுகிறார்.

## முடிவுரை

திருமந்திரமானது பக்தி நூல் அல்ல. அது ஒரு மெய்யியல் நூலாகும். உண்மையை அறிவதும் அடைவதும் எப்படி என்பதை விளக்கும் வாழ்வியல் கோட்பாடுகள் நிறைந்தது. இந்நூல் பணிவையும், துணிவையும், உடலின் துணையின்றி உயிர் நிலைக்காது என்று உண்மையினையும் கூறுகிறது. சிறப்பாகத் திருமந்திரமானது பக்தியைப் பின்னடக்கி அறிவை முன்னிலைப்படுத்துகிறது. அன்பே சிவம் என்ற அரிய உண்மை கூறப்பட்டுள்ளது. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று சமய ஒருமைப்பாட்டிற்கு வித்திட்டவர் திருமூலராவார். திருமந்திரமானது உலக மக்கள் அனைவருக்குமாக வாழ்வியல் அறத்தையும், ஆன்மிக சுதந்திரத்தையும், வலியுறுத்துகிறது. உடலை உறுதி செய்து, உடல் நலன் காப்பதே உள்ளத்தை காக்கும் வழி என்று விளக்குகிறார். மேலும் சிறப்பாக கடவுள் நம்பிக்கை, சித்தாந்தம் ஆகியவற்றில் கோட்பாடுகள் பலவற்றை அறிந்தாலும் அவரவர் தனக்கான முறையைக் காணும் வழியையும், சுதந்திரத்தையும் திருமூலர் காட்டுகிறார்.

## References

Arumugath Tamilan, (2019) Uyir valakkum Thirumanthiram, The Hindu Publication, Chennai, India

Avvai Duraisamy Pillai, (1951) Purananooru, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India.

Chidambaranar (1942) Thirumanthiram Moovayiram, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India.

Parimelalhagar (1967) Thirukkural, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India.

Perasiriyar, (1966) Tholkappiyam Porulathikaram, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India.

Ramathapillai, (1957) Thirumanthiram Moovayiram, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India.

Somasundaranar, P.V. (1964) Kundalakesi, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India.

Thambiran Swamigal, (1949) Arpudha Thiruvandhathi, Kasi Madam, Thiruppanandal, India.

Urana Adikal, (1972) Thiru Arutpa, Ramalinganar Panimandram, Chennai, India

Vengada Subburaya Nayagar, S.A. (2010) Periyapuranam, Mullai Nilayam, Chennai, India.

Venkatasami Nattar, N.M., Avvai Duraisamy Pillai (1946) Manimekalai, Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License